# விடியல்

The Dawn

*மாத இதழ், பொழுது – 31*
*நவம்பர், 2011*

vidiyalmagazhine.blogspot.com
vidiyalmagazhine@gmail.com



*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
**www.ksrcasthamizh.blogspot.com**
**www.ksrcas.edu**


# உள்ளடக்கம்

## குறுங்கட்டுரைகள்


*வள்ளல்களின் சிறப்பு* 02,
*தமிழில் தெரியாத பழகியசொற்கள்* 02,
*The value of Zero* 20


## கட்டுரைகள்


*சர்.சி.வி. இராமன்* 03,
*அழ. வள்ளியப்பா* 06,
*அ.ச. ஞானசம்பந்தன்* 09,
*அபுல் கலாம் ஆசாத்* 10,
*மயிலை சீனி. வேங்கடசாமி* 13,
*ஜான்சி ராணி* 16


## கவிதைகள்


*எனக்குப் பிடித்தவை, நட்பு* 05,
*வறுமையின் பிடியில்* 16,
*My Friend* 18,
*கல்வியின் மேன்மை* 19,


## மாதம் ஒரு படைப்பாளர்


*எழுத்தாளர் கல்கி* 18


### *முன் அட்டை ஓவியம்*

ஜான்சி ராணியின் உருவ ஓவியம்
*Chambers's History of the Revolt in India. London, 1859.*

### *பின் அட்டை ஓவியம்*

அ. அருள்மொழி
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை

## வள்ளல்களின் சிறப்பு

சு. திருநாவுக்கரசு
மூன்றாமாண்டு தமிழ் இலக்கியம்

***பேகன் -*** குளிரில் நடுங்கிய மயிலுக்குக் கலிங்கம் (ஆடை) வழங்கிய வள்ளல்.

***பாரி -*** படர பற்றுக்கோடு இல்லாம் துவண்ட முல்லைக்கொடிக்குத் தன்தேரை வழங்கிய வள்ளல்.

***காரி -*** இரவலர்க்குக் குதிரைகள் வழங்கிய வள்ளல்.

***ஆய் அண்டிரன் -*** நாகப்பாம்பு அளித்த சட்டையைச் (பாம்புத்தோல்) சிவபெருமானுக்கு வழங்கிய வள்ளல்.

***அதியமான் -*** அரிய நெல்லிக்கனியைப் புலவர் ஔவைக்கு வழங்கிய வள்ளல்.

***நள்ளி -*** இரவலர்கள் சமைத்து உண்ணத் தேவையான பாத்திரங்களை வழங்கிய வள்ளல்.

***ஓரி -*** இரவலர்களுக்குப் பல ஊர்களை வழங்கிய வள்ளல்.

இவர்கள் குறுநில மன்னர்களாகவும் இரவலர்களுக்கு வள்ளல்களாகவும் தமிழ் இலக்கியக் காவலர்களாகவும் திகழ்ந் தவர்கள்.

## தமிழில் தெரியாத பழகியசொற்கள்

இரா. தர்மதுரை
மூன்றாமாண்டு தமிழ் இலக்கியம்

“தெரியு, ஆனா, தமிழ்ல தெரியாது” என்று சொல்லக்கூடிய பல சொற்கள் நம் சிந்தையில் உள்ளன. அவற்றுள் சிலவற்றுக்குத் தமிழ்ச் சொற்களை அறிந்து கொள்ளும் வகையில் இவற்றை இங்குத் தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

1.காலிபிளவர் - பூவுருளை
2.ஸ்பேனர் - திருகி
3.பேனர் - பதாகை
4.டிபன்பாக்ஸ் - உணவடம்
5.இரப்பர் - அழிப்பான்
6.கர்ச்சிப் - கைக்குட்டை
7.ஜன்னல் - காலதர்
8.சைக்கிள் - மிதிவண்டி
9.புத்தகம் - நூல்
10.ஹோட்டல் - உணவகம்
11.டீ – தேனீர்
12.காபி – குழம்பி
13.கேண்டீன் - சிற்றுண்டிச்சாலை
14.பேனா – எழுதுகோல்
15.பாஸ்போட் - கடவுச்சீட்டு
16.பாஸ்ட்புட் - துரிதஉணவகம்
17.பாஸவேர்டு – கடவுச்சொல்
18.லேப்டாப் - மடிக்கணினி

# சர். சி.வி. இராமன்



சர் சந்திரசேகர வெங்கட இராமன் (Chandrasekhara Venkata Raman) (நவம்பர் 7, 1888 - நவம்பர் 21, 1970) பெரும் புகழ் நாட்டிய இந்திய அறிவியல் அறிஞர்.

இவர் 1930இல் இயற்பியல் துறைக்கான நோபல் பரிசைப் பெற்றார். ஒளி ஒரு பொருளின் ஊடே செல்லும் பொழுது சிதறும் ஒளியலைகளில் ஏற்படும் அலைநீள மாற்றத்தை இவர் கண்டுபிடித்தார். இப்படிச் சிதறும் ஒளியின் அலைநீள மாற்றதிற்கு இராமன் விளைவு (Raman Effect) என்று பெயர். இக்கண்டுபிடிப்புக்குத் தான் இவருக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பு இன்று பொருள்களின் பல விதமான பண்புகளைக் கண்டறிய (பொருளுக்கு கேடு ஏதும் நேராமலும்) மிகவும் பயனுடையதும் உலகில் புகழ் பெற்றதும் ஆகும்.

சி.வி. இராமன் நவம்பர் 7 ஆம் நாள், 1888ஆம் ஆண்டில் இந்தியாவில், திருச்சியில் பிறந்தார். சென்னையிலே உள்ள பிரெசிடென்சிக் கல்லூரியில் 1902ஆம் ஆண்டு நுழைந்து 1904இல் கலை இளநிலை (பி.ஏ) பட்டமும் தங்கப் பதக்கமும் பெற்றார். அப்பொழுது அவருக்கு, வயது 16. பின்னர் 1907இல் இவர் முதுகலை பட்டமும் பெற்றார். அதிலும் இவர் உச்சச் சிறப்புகளோடு பெற்றார். முழுமையாக இந்தியாவிலேயே படித்த ஒரு அறிஞருக்கு 1930இல் நோபல் பரிசு கிடைத்தது முதல் முறை யாகும்.

இவர் பட்டம் பெற்றதும், அறிவியல் துறை சார்ந்த வேலை வாய்ப்புகள் இல்லாததால், இந்திய அரசுப் பணவியல் துறையில் 1907இல் ஒரு கணக்காயராகச் சேர்ந்தார். என்றாலும் பணியின் ஊடே கொல்கத்தாவில் உள்ள அறிவியல் வளர்ச்சிக் கழகத்தில் (Indian Association for the Cultivation of Science), ஒளிச்சிதறல் பற்றிய செயல்வழி (செய்முறை) ஆய்வுகள் நடத்தி

வந்தார். பின்னர் 1917இல் கொல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருந்த பாலித் பீட இயற்பியல் பேராசிரியராகச் சேர்ந்தார். கொல்கத்தாவிலே 15 ஆண்டுகள் கழித்த பிறகு, இவர் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில் (Indian Institute of Science) 15 ஆண்டுகள் கழித்தார். அதன் பின் அவராகவே நிறுவிய இராமன் ஆய்வுக்கழகத்தில் (Raman Research Insitute) இயக்குநராக இறுதி நாட்கள் வரை பணியாற்றி வந்தார். இவர் நவம்பர் 21, 1970இல் இவ்வுலகில் இருந்து பிரிந்தார்.

இவர் 1926இல் இந்திய இயற்பியல் ஆய்விதழ் (Indian Journal of Physics) என்னும் அறிவியல் இதழை நிறுவி அதன் தொகுப்பாசிரியராகவும் பணிபுரிந்தார். இந்திய அறிவியல் அறிவுக்கழகத்தைத் (Indian Science Academy) ஆரம்பித்து, பின்னர் தானே அதன் தலைவராகவும் தொடக்கம் முதலாக இருந்து பணியாற்றினார். அதனுடைய அறிவியல் நடப்புகளை வெளியீடு செய்வதிலும் முன் நின்றார். அதுமட்டும் அல்ல இவர் பெங்களூரில் இன்றைய அறிவியல் கழகம் (Current Science Association) என்னும் கழகத்தைத் தொடக்கி, அதன் தலைவராகவும் பணிபுரிந்து, அக் கழகத்தின் வழியாகப் புகழ் பெற்ற கரன்ட் சயன்ஸ் (Current Science) என்னும் ஓர் அறிவியல் ஆய்வி தழையும் நிறுவினார்.

இந்திய இயற்பியல் ஆய்வி தழில் (Indian J. Physics) இவர் பிப்ரவரி 28, 1928 இல் ஒரு புதிய ஒளிர்ப்பாடு (கதிர்வீச்சு) A new Radiation என்னும் தலைப்பில் தம் ஆய்வுக் கண்டுபிடிபுகளின் முடிவுகளை வெளியிட்டார். இப்புது அறிவியல் ஒளி விளைவுதான் இவருக்கு நோபல் பரிசு பெறவும் தன் பெயரால் ஒரு அறிவியல் விளைவு பெயர் பெறவும் வழி வகுத்தது. இதனை இந்திய ஆய்விதழில் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் வயலின் (பிடில்), மிருதங்கம் போன்ற இசைக் கருவிகள் பற்றியும் நன்கு ஆய்வு செய்து புதுக் கண்டுபிடிப்புகள் செய்துள்ளார். பகலில் வான் ஏன் நீல நிறமாக இருக்கின்றது என்பது பற்றியும் இவர் விளக்கியிருக்கிறார். இவருடைய உடன்பிறந்தாரின் மகனான சுப்பிரமணியன் சந்திர

சேகரரும் நோபல் பரிசு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

- *இவருக்கு லண்டனிலுள்ள ராயல் சொசைட்டியின் ஃபெல்லோசிப் 1924 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டது.*
- *பிரிட்டிஷ் அரசு இவருக்கு 1929 ஆம் ஆண்டில் 'நைட் ஹீட்' எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.*
- *1929இல் ஆண்டில் இங்கிலாந்து அரசியாரால் சர் பட்டம் அளிக்கப் பட்டது.*
- *இத்தாலி நாட்டின் உயர்பதக்கமான 'மேட்யூச்சி' பதக்கம் வழங்கப் பட்டது.*
- *மைசூர் அரசர் 'ராஜ்சபாபூசன்' பட்டத்தை 1935 ஆம் ஆண்டில் வழங்கினார்.*
- *பிலிடெல்பியா நிறுவனத்தின் 'பிராங்க்ளின்' பதக்கம் 1941 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.*
- *இந்தியாவின் உயர் விருதான பாரத ரத்னா விருது 1954ஆம் ஆண்டில் அவருடைய வாழ் நாளிலேயே அளிக்கப்பட்டது.*
- *1957 ஆம் ஆண்டில் அகில 'உலக லெனின் பரிசு' அளிக்கப்பட்டது.*

***இவரது பிறந்தநாள் நவம்பர் 07 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.***

***தொகுப்பு:***

**கே. மணிகண்டன்,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை

Ω

## எனக்குப் பிடித்தவை

*"புல்லின் மேல் பனித்துளி – அது*
*மழையால் கிடைத்த சிறுதுளி.*

*குதித்து அழும் குழந்தை – அது*
*வளந்தால் சிரிக்கும் அழகி.*

*விடியலில் எழும் கதிரொளி – அது*
*மறைந்தால் மண்ணில் நிலவொளி.*

*கொஞ்சிப்பேசும் கிளிகள் - நம்மோடு*
*அன்பைப் பகிரும் விழிகள்.*

*இவை எல்லாம் எனக்குப் பிடிக்கும்.*
*எதுதான் என்றும் நிலைக்கும்?"*

**த. மலர்விழி**
மூன்றாமாண்டு தமிழ் இலக்கியம்


Ω

## நட்பு

*"சிறகுகள் கிடைத்தால்*
*பறப்பதல்ல நட்பு -*
*சிலுவைகள் கிடைத்தாலும்*
*சுமப்பதே நட்பு"*

**த. காயத்ரி,**
இரண்டாமாண்டு
துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை

# அழ. வள்ளியப்பா



அழ. வள்ளியப்பா (நவம்பர் 7, 1922 - மார்ச் 16, 1989) குழந்தை இலக்கியங்கள் படைத்த மிக முக்கியமான கவிஞர். 2,000-க்கும் மேலான குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதியுள்ளார்.

### *பிறப்பு*

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922ஆம் ஆண்டு பிறந்தார். இவர் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த அழகப்ப செட்டியார், உமையாள் ஆச்சி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்குச் சூட்டிய பெயர் வள்ளியப்பன். இராயவரம் காந்தி ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பின்னர் இராமச் சந்திரபுரத்தில் உள்ள பூமீ சுவரசுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

### *எழுத்துப் பணி*

தொடர்ந்து படிக்க முடியாததால் 1940 ஆம் ஆண்டில் வாழ்வாதாரம் தேடி வை. கோவிந்தன்னின் சென்னை ***சக்தி*** பத்திரிகை அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தார். அப்போது ***சக்தி*** ஆசிரியராக இருந்த தி.ஜ.ர.வின் ஊக்குவிப்பின் காரணமாகச் சக்தி இதழிலேயே எழுத ஆரம்பித்தார். ‘ஆளுக்குப் பாதி’ என்னும் தம் முதல் கதையை எழுதினார்.

சக்தியில் பணியாற்றிய போது வள்ளியம்மை என்பாரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரு மகனும், நான்கு மகள்களும் உள்ளனர்.

1941இல் சக்தியில் இருந்து விலகி இந்தியன் வங்கியில் சேர்ந்தார். வங்கிப் பணியில் இருந்தவாறு கவிதையும் கட்டுரையும் எழுதத் தொடங்கியவர் 1982இல் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னும் எழுதிக் கொண்டுதான் இருந்தார்.

### *பத்திரிகை ஆசிரியர்*

வங்கி பணியில் இருக்கும்போதே பாலர் மலர், டமாரம், சங்கு பத்திரிகைகளுக்கு சிறப்பாசிரியராகப் பணியாற்றினார். 1951 முதல் 1954 வரை ***பூஞ்சோலை*** என்ற இதழுக்கும், 1983 இல் இருந்து 1987 வரை கல்கி வெளியீடான ***கோகுலம்*** என்ற இதழிலும் ஆசிரியராக இருந்தார்.

### *குழந்தை எழுத்தாளர் சங்கம்*

குழந்தை எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி 1950இல் ***குழந்தை எழுத்தாளர்கள் சங்கம்*** என்ற அமைப்பை உருவாக்கினார். சக்தி வை.கோவிந்தன் இச்சங்கத்தின் முதல் தலைவராக இருந்தார். அவரைத் தொடர்ந்து வள்ளியப்பா இந்த அமைப்பின் காரியதரிசியாகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும் பல பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டார்.

### *நூல்கள்*

அழ. வள்ளியப்பா 11 பாடல் தொகுதிகள், 12 புதினங்கள், 9 கட்டுரை நூல்கள், 1 நாடகம், 1 ஆய்வு நூல், 2 மொழிபெயர்ப்பு நூல்கள், 1 தொகுப்பு நூல் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார். இவற்றில், 2 நூல்கள் இந்திய நடுவண் அரசின் பரிசும், 6 நூல்கள் தமிழக அரசின் பரிசும் பெற்றன.

'நம் நதிகள்' என்ற தலைப்புடன் தென்னாட்டு ஆறுகள் பற்றிய இவரது நூலை, தேசீய புத்தக டிரஸ்ட் பதினான்கு இந்திய மொழிகளில் வெளியிட்டுள்ளது.

### *சொற்பொழிவுகள்*

1979இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கல்கி அறக்கட்டளை நிகழ்வில் 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். 1981இல் 5ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

### *பாராட்டும் விருதும்*


'குழந்தைகள் இலக்கிய முன்னோடி', 'பிள்ளைக் கவியரசு', 'மழலைக் கவிச் செம்மல' என்று சில அமைப்புகள் இவரைப் பாராட்டி போற்றியுள்ளனர். 1982இல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதளிக்கப்பட்டு பாராட்டப்பட்டார்.

***இவரது பிறந்தநாள் நவம்பர் 07 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.***

**எஸ். கார்த்திகேயன்,**
இரண்டாமாண்டு நுண்ணுயிரியல்துறை.

Ω

# அ.ச. ஞானசம்பந்தன்



அ. ச. ஞானசம்பந்தன் (நவம்பர் 10, 1916 – ஆகஸ்ட் 27, 2002) தமிழ் அறிஞர், எழுத்தாளர் மற்றும் இலக்கிய விமர்சகர். அவர் 1985 ஆம் ஆண்டின் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர். சுருக்கமாக அ. ச. ஞா. என்றும் அழைக்கப் படுகின்றார்.

அ. ச. ஞானசம்பந்தன் திருச்சியில் அரசன்குடி என்ற ஊரில் பிறந்தார். அவரது பெற்றோர் அ. மு. சரவண முதலியார் மற்றும் சிவகாமி ஆவர். அவரது தந்தை சைவசமய பக்திக் காவியமான திருவிளையாடல் புராணத்திற்கு உரையெழுதிய தமிழ் அறிஞர். ஞானசம்பந்தன் லால்குடி போர்டு உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்த பின் இடைநிலை வகுப்புக்கு (இண்டெர்மீடியட்) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இயற்பியல் பாடத்தைத் தேர்வு செய்து படித்தார். அங்குத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த சோமசுந்தர பாரதியார் இவரது தமிழ் அறிவையும் ஆர்வத்தையும் அடையாளம் கண்டு இவரை இயற்பியலில் இருந்து தமிழுக்கு மாறும்படி செய்தார். அக் கல்லூரியில் படிக்கும்போது வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி, திரு. வி. க., தெ. பொ. மீனாட்சி சுந்தரம் போன்ற தமிழ் அறிஞர்களின் தொடர்பு அவருக்குக் கிடைத்தது. தமிழில் முதுகலைப் பட்டம் பெற்று 1942இல் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்து 1956 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

அ. ச. ஞானசம்பந்தனின் முதல் புத்தகமான 'ராவணனன், மாட்சியும் வீழ்ச்சியும்' என்ற புத்தகம் 1945இல் வெளியானது. இப்புத்தகமும், கம்பன் காலை (1950) மற்றும் தம்பியர் இருவர் (1961) ஆகிய புத்தகங்களும் அவருக்குக் கம்ப ராமாயணத்தில் இருந்த செறிந்த அறிவுக்குச் சான்றாக அமைந்தன. பச்சையப்பன் கல்லூரியிலிருந்து வெளியேறிய பின் 1956 – 1961 வரை அகில இந்திய வானொலியின் சென்னை அலுவலகத்தில் நாடகங்கள் தயாரிப்புப் பிரிவின்

பொறுப்பு அலுவலராக வேலை பார்த்தார். 1959இல் தமிழ்ப் பதிப்பகங்களின் பணியகத்தின் செயலா ளரானார். 1969 – 1972 வரை தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் தலைவராக இருந்தார். 1970இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையின் தலைவராகப் பணியில் சேர்ந்து பின் 1973இல் அப் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்றார். பின்னாளில் அதே பல்கலைக்கழகத்தில் தாகூர் ஓய்வுப் (Tagore Emeritus Professor) பேராசிரியாராகப் பணி யாற்றினார். அவர் தனது இறுத்திக் காலத்தைச் சென்னையில் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் கழித்தார்.

இவர் ஒரு சைவ சமய அறிஞராகவும் பாடநூல் தயாரிப்பாளர் மற்றும் தமிழ் விரிவுரையாளராகவும் வாழ்ந்தவர். இவர் எழுதிய நூல்கள் 35 ஆராய்ச்சிப் புத்தகங்கள், 3 மொழிபெயர்ப்பு புத்தகங்கள் மற்றும் ஏராளமான பாடப் புத்தகங்களும் கட்டுரைகளும் ஆகும்.

1985இல் ‘கம்பன்: புதிய பார்வை’ என்ற அவரது இலக்கிய விமர்சன நூல் தமிழுக்கான சாகித்திய அக்காதெமி விருது பெற்றது. சங்கப்பலகை குறள் பீடம் விருது - தமிழக அரசு விருது – 2001 ஆகியனவற்றையும் பெற் றுள்ளார்.

இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கன பின்வருமாறு:

1.ராவனண்,மாட்சியும்வீழ்ச்சியும்- 1945
2.கம்பன் காலை - 1951
3.தம்பியர் இருவர் - 1961
4.இலக்கியக் காலை - 1964
5.கிழக்கும் மேற்கும் - 1971
6.மணிவாசகர் - 1974
7.தத்துவமும் பக்தியும் - 1974
8.கம்பன் புதிய பார்வை -1985
9.தேவார திருப்பதிகங்கள் - 1998

***இவரது பிறந்தநாள் நவம்பர் 10 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.***

**-ஆசிரியர்குழு**


**Ω**

## துளிச்செய்திகள்

தொழிச்சாலைகள் தயாரிப்பதை விட மூன்று மடங்கு அளவில் நைட்ரஜன் அடங்கிய உரங்களைச் சூறாவளிகள் தயாரித்துக் கொடுக் கின்றன. சூறாவளிகள் பல தீங்கு செய்தாலும் மிகச் சில நன்மை களையும் செய்துவிடுகின்றன.

**- செ. கவிதா,**
இரண்டாமாண்டு
கணினி அறிவியல் துறை ‘அ’

# மௌலான
# அபுல் கலாம் ஆசாத்



ஆசாத்தான் தேச கல்வி முறைக்காக முதலில் குரல் எழுப்பியவர். தேச கல்வி கொள்கைக்கு (1986) இதுதான் அடிப்படையாக விளங்குகிறது. இந்த கொள்கை 1992இல் புதுப்பிக்கப்பட்டது. அனைத்து மாணவர்களுக்கும், சாதி, மத இட, பால் பாகுபாடின்றி தரமான கல்வியைக் குறிப்பிட்ட நிலைவரை அளிக்க வேண்டும் என்று ஆசாத் வலியுறுத்தினார்.

அனைத்து கல்வித் திட்டங்களும், மதச்சார்பற்ற மதிப்பீடுகளுக்கும், அரசியல் அமைப்பு சட்டத்தின் கட்டமைப்பிற்கும் ஏற்றவாறு இருக்க வேண்டும் என்பதில் ஆசாத் உறுதி காட்டினார். 10+2+3 என்ற பொதுவான கல்வி முறையை இந்தியா முழுவதிலும் பரவலாக்க அவர் விரும்பினார். **"நமது நாட்டின் செல்வம் வங்கிகளில் இல்லை, ஆரம்ப பள்ளிகளில் உள்ளது"** என்று கூறினார்.

1888ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் தேதி, மௌலானா கைருதீனுக்கும், அலியாவுக்கு மகனாக, மெக்காவில், மௌலான அபுல் கலாம் ஆசாத் பிறந்தார். 10 வயதிலேயே குரானைக் கற்றுத் தேர்ந்தார். 17 வயதில் இஸ்லாமிய உலகில் பயிற்சி பெற்ற ஆன்மீகவாதியாக அறியப்பட்டார். கெய்ரோவில் உள்ள அல் அசார் பல்கலைக் கழகத்தில் அவர் கற்ற கல்வி அவரது அறிவை விசாலமாக்கியது. அவரது குடும்பம் கல்கத்தாவில் குடியேறிய பின்பு ***லிசான்-உல்-சித்க்*** என்ற இதழைத் துவக்கி நடத்தினார்.

1905இல் வங்கப் பிரிவினையின் போது ஆசாத் அரசியலில் நுழைந்தார். நடுத்தர வர்க்க இஸ்லாமிய சமூகத்தினர் பிரிவினையை ஆதரித்த போது, அவர் கடுமையாக எதிர்த்தார். அரவிந்த கோஷ், சியாம் சுந்தர் சக்கரவர்த்தி ஆகியோருடன் இணைந்து பல்வேறு போராட்டங் களில் ஈடுபட்டார்.

இந்தியா ஒன்றுபட்ட நாடாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அதன் பின் ‘இந்தியா சுதந்திரத்தை வெல்கிறது’ என்ற பிரசித்தி பெற்ற நூலை எழுதினார்.

சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட ஆசாத், சிறையில் பல ஆண்டுகளைக் கழித்தார். இந்திய தேசிய காங்கிரசின் முக்கியத் தலைவராக விளங்கினார். 1920இல் திலகரையும், மகாத்மா காந்தியையும் சந்தித்தார். இச்சந்திப்பு அவர் வாழ்க்கையின் திருப்புமுனையாக இருந்தது. காந்தியடிகள் கிலாபத் இயக்கத்தைத் துவக்கினார். முஸ்லீம் லீக் கட்சி காந்தியின் உண்ணா விரதத்தைப் புறக்கணித்த போது ஆசாத் காந்தியுடன் இணைந்து முனைப்புடன் பணியாற்றினார். தமது 35ஆவது வயதில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக உயர்ந்தார். அக்கட்சியின் இளம் வயது தலைவரும் அவரே. 1942இல் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் போது காங்கிரஸ் கட்சியின் தலைமை செய்தித் தொடர்பாளராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். சிம்லாவில் 1946இல் நடைபெற்ற கேபினட் மிஷன் பேச்சு வார்த்தைகளிலும் முக்கிய பங்காற்றினார்.

காங்கிரஸ் கட்சியின் பல தலைவர்கள் 1947இல் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்த போது, அதற்கு எதிராக ஆசாத் உண்ணாவிரதம் இருந்தார். இந்தியா சுதந்திரம் அடைந்தபின் மௌலானா அபுல் கலாம் ஆசாத் முதல் கல்வி அமைச்சராக பொறுப்பேற்றார். 1947 முதல் 1958 வரை அவர் இந்தப் பதவியில் இருந்தார். சாகித்திய அக்காதெமி (1954), லலித் கலா அகாடமி (1954), கலாச்சார உறவுகளுக்கான இந்திய கவுன்சில் உள்ளிட்ட பல பிரபல அமைப்பு களை ஆசாத் உருவாக் கினார்.

ஆங்கிலேய ஆட்சியில் இந்திய கல்வியில் கலாச்சாரம் தொடர்பான அம்சங்கள் குறைவாக இருந்ததை உணர்ந்த அவர், அவற்றை வலுப்படுத்தும் முயற்சிகளில் இறங் கினார். கல்விக்கான மத்திய ஆலோசனை வாரியத்தின் தலை வராக இருந்த ஆசாத், பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட மத்திய மாநில கல்வி முறைகளில் சீர்திருத் தங்கள் செய்ய பரிந்துரைத்தார். ***14 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும்*** என்று வலியுறுத்தினார்.

பெண் கல்வி, தொழிற் பயிற்சி, வேளாண் கல்வி, தொழில்நுட்ப கல்வி உள்ளிட்ட பல சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்தார். பல்கலைக் கழகங் களுக்குக் கல்வித் துறை சார்ந்த பணிகள் மட்டுமல்லாமல் சமூகப் பொறுப்பும் உள்ளது என்று கூறினார். வயது வந்தோருக்கான கல்வித் துறையில் ஆசாத் ஒரு முன்னோடியாக இருந்தார். உருது, பார்சி, அரபு மொழிகளை கற்றுத் தேர்ந்தவராக இருந்தாலும் தேசிய மற்றும் சர்வதேச தேவைகளை முன்னிட்டு ஆங்கில மொழியை தொடர்ந்து பயன்படுத்தச் செய்தவர் ஆசாத். ஆரம்பக் கல்வி தாய் மொழியிலேயே இருக்க வேண்டும் என்றார். தொழில்நுட்ப கல்விக்கான அகில இந்திய கவுன்சிலை வலுவான அமைப்பாக மாற்றினார். 1951இல் காரக்பூரில் இந்திய தொழில்நுட்ப பயிலகம் (ஐஐடி) அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பம்பாய், சென்னை, கான்பூர், தில்லி ஆகிய நகரங்களிலும் ஐ.ஐ.டி.கள் அமைக் கப்பட்டன. தில்லியில் 1955இல் திட்டமிடுதல் மற்றும் கட்டிட கலைக்கான பள்ளி ஏற்படுத் தப்பட்டது.

மதவாதத்தை ஒரேடியாகக் குழி தோண்டிப் புதையுங்கள் என்பதுதான் ஆசாத் மாணவர்களுக்கு எப்போதும் கூறும் அறிவுரையாகும். அரபு, உருது, பார்சி ஆகிய மொழிகளில் மௌலான அபுல் கலாம் ஆசாத் பல நூல்களை எழுதியுள்ளார். குரானை அரபு மொழியிலிருந்து பார்சி மொழிக்கு மொழி பெயர்த்தார். 1977இல் சாகித்திய அக்காதெமி இதனை ஆறு பகுதிகளாகப் பிரசுரித்தது.

Courtesy:tamil.webdunia.com

***தொகுப்பு:***

**ஜீ. வெங்கடேசன்,**

இரண்டாமாண்டு உயிர்வேதியியல் துறை.

***மௌலான அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த தினமான நவம்பர் 11ஆம் தேதி தேச கல்வி தினமாக அறிவிக்கப் பட்டுள்ளது.***

**Ω**

## துளிச்செய்திகள்

தேனீக்கள், புறாக்கள் மற்றும் டால்பின்களின் தலைப்பகுதியில் 'மாக்னடைட்' என்ற ஒரு பொருள் உள்ளது. இதன் உதவியால்தான் அவை வட மற்றும் தென் துருவங்களை அறிந்துகொள்கின்றன.

**- செ. கவிதா,**

இரண்டாமாண்டு

கணினி அறிவியல் துறை 'அ'

# மயிலை
# சீனி. வேங்கடசாமி



மயிலை சீனி. வேங்கடசாமி 16.12. 1900 ஆம் நாள் பிறந்தார். இவரின் தந்தை சீனிவாச நாயக்கர் ஒரு சித்த மருத்துவர். அவரது இல்லத்தில் ஓலைச்சுவடிகள் மற்றும் நூல்களைச் சேகரித்து வாசிக்கும் பழக்கம் இருந்தது. வேங்கடசாமி தன் தமைய னார் சீனி.கோவிந்த ராஜனிடம் தமிழ்ப் பயிற்சி பெற்றார். தமிழ்ப் பற்று இவருக்கு முன்னோர்கள் வழி கிடைத்து. மயிலை புனித சாந்தோம் உயர்நிலைப்பள்ளியில், பள்ளி இறுதி வகுப்பை நிறைவு செய்தார். 20ஆவது வயதில் சென்னை கலைக் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டார். பின்பு ஆசிரியப் பயிற்சி முடித்து நகராட்சி தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார்.

இவர் சுயமரியாதை இயக்கச் சார்பாளராக வாழ்வைத் தொடங் கினார். நீதிக்கட்சி நடத்தப்பட்ட 'திராவிடன்' நாளேட் டின் ஆசிரியர் குழுவில் ஒருவராகப் பணிபுரிந்தார். பின்னாளில் 'குடியரசு', 'ஊழியன்' போன்ற இதழ்களில் செய்திக் கட்டுரைகள் எழுதினார். 'கௌதம புத்தர்' என்ற நூலை எழுதினார். புத்தர் வரலாறு, பள்ளி வரலாற்றுப் பாடத்தில் கற்கும் கதையாக எழுதப்பட்டது. 'புத்தர் ஜாதகக் கதைகள்' என்ற நூலைத் தமிழில் முதன் முதலாக எழுதினார். இக் கதைகளில் புத்த மதக் கோட்பாடுகள் எளிமையாகக் கூறப் பட்டுள்ளன.

இவர் 1950களின் இறுதிக் காலங்களில், கி.பி.3ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்றவற்றை ஆய்வு செய்து மன்னர்களைப் பற்றிய நூல்களை உருவாக்கினார். 'மகேந் திரவர்மன்' என்ற நூலை முதன் முதலாக வெளியிட்டார். 'வாதாபி கொண்ட நரசிம்மன்' என்ற நூலில்

நரசிம்மவர்மன் காலத்தில் உருவாக் கப்பட்ட குடவரைக் கோயில் கள் குறித்தும், இம்மன்னன் காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்ப வடிவங்கள் பற்றியும் விரிவான தகவல்களைத் தந்துள்ளார். இந்த நூல் தமிழக சிற்ப வரலாற்றை தெரிந்துகொள்ள பெரிதும் உதவுகின்றது.

சேரன், செங்குட்டுவன் ஆய்வில் தொடங்கி, சங்க காலம் குறித்த ஆய்வுகளை நிகழ்த்தி உள்ளார். அக்காலத்தில் தமிழகம் சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடு, துளுநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு என்று ஆறு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்த தாகத் தெளிவுபடுத்தி, இதற்கான வரைபடத்தையும் உருவாக் கினார். ஒவ்வொரு நாடு தொடர்பான ஆய்வு களையும் மேற்கொண்டு ‘துளுநாட்டு வரலாறு’, ‘கொங்குநாட்டு வரலாறு’ ஆகிய நூல்களை எழுதியுள்ளார். தமது அனைத்து ஆய்வுகளிலும், இலங்கை தொடர்பான குறிப்புகளைக் கொடுப்பதை மரபாகக் கொண்டிருந்தார்.

‘தமிழ்நாட்டு வரலாறு’ என்ற நூலில் ‘இலங்கையில் தமிழர்’ என்ற ஆய்வை மேற்கொண்டார். தமிழக வரலாற்றை கட்டமைத்து ஒழுங்கு படுத்தியதில் இவருக்குத் தனித்த இடமுண்டு. மகாபலிபுரத்துச் சிற்பங் கள் தொடங்கி, பல்லவ மன்னர்கள் காலத்து கட்டடம் மற்றும் சிற்பக்கலை தொடர்பான ஆய்வை யும் மேற்கொண்டார். இசைக் கூத்து குறித்தும் ஆய்வு செய்துள்ளார். ‘தமிழ் வளர்த்த அழகுக் கலைகள்’ என்ற நூலில் தமிழர்களின் பழங்கால அழகுக் கலைகள் குறித்து விரிவாக எழுதியுள்ளார். இந்நூல் சில கல்லூரிகளிலும் பாடமாக உள்ளது.

19ஆம் நூற்றாண்டின் தமிழ் சமூக வரலாற்றை அறிவதற்கான தொகுப்பாக ‘19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்’ என்ற நூலை எழுதியுள்ளார். வேங்கடசாமி, கன்னடம், மலையாளம், பாலி, சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயிற்சியுடையவராக இருந்தார். மலையாளத்திலிருந்து சில நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

ஓவியங்கள் குறித்து ஆய்வு செய்த வேங்கடசாமி, பல்லவர் காலத்து ஓவியங்கள், பிற்காலச் சோழர்கால ஓவியங்கள், பிற்கால ஓவியங்கள் எனப் பல்வேறு ஓவியங்கள் குறித்து ஆய்வு

செய்துள்ளார். குறிப்பாக, கைலாசநாதர் கோயில் ஓவியம், தஞ்சை பெரியகோயில் ஓவியம், மதுரை நாயக்கர்கால ஓவியம் குறித்து ஆய்வு செய்துள்ளார். 1962ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சார்பில் அறக்கட்டளை சொற் பொழிவுகள் நிகழ்த்தினார். இவற்றை ‘சங்ககால வரலாற்றில் சில செய்திகள்’ என்னும் பெயரில் பின்னர் அப்பல்கலைக் கழகம் நூலாக வெளியிட்டது.

சங்ககாலத் தமிழரின் வணிகம், சங்ககால விளைபொருட்கள் போன்றவை குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டு, ‘பழங்காலத் தமிழர் வாணிகம்’, ‘சங்க காலத்து பிராமிக் கல்வெட்டு எழுத்துக்கள்’ ஆகிய நூல்களாக வெளியிட்டார். தமிழக அரசு உருவாக்கிய, தமிழக வரலாறு எழுதும் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவிலும் இடம் பெற்றிருந்தார்.

‘தமிழ்நாட்டு வரலாறு’ சங்க காலம், அரசியல் என்ற இரண்டாம் தொகுதியில் மூவேந்தர்களைப் பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். இவ்வளவு ஆராய்ச்சிகளை மேற்கொண்ட இவர், தமிழ்நாட்டின் வரலாறு முழுமையாகவும், தெளிவா கவும், சரியாகவும் இன்னும் எழுதப்படாமல் இருப்பது பெருங் குற்றமாகும் என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

திராவிடன், செந்தமிழ்ச்செல்வி, ஊழியன், ஆரம்பாசிரியன், செந் தமிழ், தமிழ்ப்பொழில் ஆராய்ச்சி, திருக்கோயில், நண்பன், கல்வி, இலட்சுமி, ஆனந்தபோதினி, தமிழ் நாடு, சௌபாக்கியம், ஈழகேசரி, கலைக்கதிர் ஆகிய இதழ்களில் 200க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளி யிட்டுள்ளார். தமிழில் 33 நூல் களை எழுதியுள்ளார்.

நம் சிற்பக் கலைப்பொருட்கள் அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குக் கடத்தப் படுவதனைக் கண்டித்தார். அச் செயல்களைத் தடுத்து அச் சிற்பங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

1980ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவருக் குப் ‘தமிழ்ப் பேரவைச் செம்மல்’ என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. 08.05.1981ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

2001ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையின் சார்பாக வேங்கடசாமிக்கு நூற்றாண்டு விழா கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

***இவரது பிறந்தநாள் நவம்பர் 16 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.***

**தகவல் உதவிக்காக நன்றி: தமிழ்மணி**

***தொகுப்பு :*** **முனைவர் ப. சரவணன்,**
தமிழ் விரிவுரையாளர்

Ω

# வறுமையின் பிடியில்

*"காவிரி படுகையின் கீழ்த்தளத்தில்*
*வானத்தினைக் கூரையாக்கி*
*மண்தரையினைப் பஞ்சணையாக்கித்*
*தென்றலை மின்விசிறியாக்கி*
*ஒட்டிய வயிற்றுடன்*
*பரட்டைத் தலையுடன்*
*மனம் கலங்கிக் கண்ணீர் மல்கித்*
*துயின்றும் துயிலாமலும்*
*பட்டினியால் புரண்டு புரண்டு*
*துடிதுடித்துத் தவிக்கும்*
*நடைபாதைக் குடிமக்களை*
*எப்படி மீட்பேன் இக்கொடிய*
*வறுமையின் பிடியிலிருந்து?"*

**த. காயத்ரி,**
இரண்டாமாண்டு
துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை

Ω

# ஜான்சிராணி

**சே. கற்பகராஜ்,**
**மூன்றாமாண்டு வணிகவியல் (கணினி).**

1828 ஆம் ஆண்டளவில் வாரணாசியில் பிராமணக் குடும்பத்தில் மௌரியபந்தர் - பகீரதிபாய் என்ற தம்பதிக்குப் பிறந்தவர் ஜான்சிராணி. இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மணிகர்ணிகா. இவர் தன்னுடைய நான்காம் வயதில் தாயை இழந்தார்.

சிறு வயதிலேயே குதிரை யேற்றமும், வாள் வீச்சும் கற்றுக் கொண்டார். ஜான்சியை ஆண்ட கங்காதரராவ் என்பவருக்கு 1842 இல் மணிகர்ணிகாவைத் திருமணம் செய்து வைத்தனர். மணிகர்ணிகா லட்சுமிபாய், ஜான்சியின் ராணியானார். 1853 இல் அவருக்குப் பிறந்த மகன் ஆங்கிலேயரின் சதியினால் நாகம் தீண்டி நான்கு மாதங்களில் இறந்தது.

வீரத்தின் மறு உருவமான லட்சுமிபாய் திகழ்ந்த ஆண்டு 1835. இவரது வீரதீரச் செயல்கள், மற்றும் ஆங்கிலேயரை எதிர்த்து இவர் புரிந்த போர் போன்றவை இந்திய நாட்டில் இன்றும் நாட்டுப்புறப்

பாடல்களாகவும், நாடகங்களாகவும் பலரால் போற்றப்படுகின்றன. அமரத் துவம் பெற்ற ஒரு வீராங்கனையாக இன்றும் அவர் பெயர் அழியாப் புகழ் பெற்றுள்ளது.

ஒரே மகனும் பிறந்து இறந்த பிறகு, இருவரும் ஒரு மகனைத் தத்து எடுத்தனர். 1853 இல் கங்காதரராவ் உடல்நலமிழந்தார். இதனால் தனது நாட்டின் வாரிசு வேண்டித் தனது தூரத்து உறவினச் சிறுவனான தாமோதரராவ் என்பவனைத் தத்தெடுத் தார். நவம்பர் 21, 1853 இல் மன்னர் இறந்தார். மன்னர் கங்காதரராவ் மறைந்தபின், அவளது வளர்ப்பு மகன் தாமோதரராவை ஆட்சியில் அமர்த்த எண்ணினாள் ஜான்சிராணி.

'ஒரு மன்னருக்கு வாரிசு இல்லை யென்றால், அந்த அரசு தங்களுக்கே சொந்தம்' என உரிமை கொண்டாடி வந்த பிரித்தானியர் ஜான்சியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனால், ஜான்சி ராணி பிரித்தானி யருக்கு அடிபணிய மறுத்தார். இதனால் கடும் கோபமடைந்த பிரித் தானியர், அரண்மனையைச் சூறையாடி பொருட்களைக் கொள்ளையடித்தனர். ஜான்சி ராணியையும் அரண்மனையை விட்டு விரட்டினர். கடைசியில் தனது நாட்டை மீட்க வெள்ளையர்களை எதிர்த்துப் போராடத் துணிந்தாள் லட்சுமிபாய். தன் நாட்டை விட்டுக் கொடுக்க மறுத்த ஜான்சி ராணி லட்சுமிபாய், தன் படை வீரர்களை முன்னின்று வழி நடத்திச் சென்று பெரும் ஆற்றலுடனும், மிகத் துணிச்சலுடனும் போர் புரிந்தார்.

பிரித்தானியருக்கு எதிராகப் படைகளைத் திரட்டினார். 1857ம் ஆண்டு, முதல் விடுதலைப் போரில் தீவிரமாக குதித்தார். ஜனவரி 1858 இல் பிரித்தானியப் படையினர் (இராணுவம்) சான்சியை நோக்கி முன்னேறி இரு வாரங்களில் நகரைக் கைப்பற்றினர். ஆனாலும் ராணி தன் வளர்ப்பு குழந்தையை மடியில் சுமந்தபடியே ஆண் வேடம் பூண்டு வெளியேறி 1857 கிளர்ச்சியில் பங்கெடுத்த தந்தியா டோப் என்பவனுடன் இணைந்தாள். (இவன் பின்னர் பிரித்தானியரால் தூக்கிலிடப்பட்டான்).

வெள்ளையரின் படை குவாலி யரைக் கைப்பற்ற முகாமிட்டது. கோட்டாகி சேராய் என்ற இடத்தில் வெள்ளையரை எதிர்த்து ஜான் சிராணி போரிட்டார். வெள் ளையர்களின் நவீன போர்க் கருவிகளை எதிர்க்க முடியாமல்

1858 ஆம் வருடம், ஜுன் மாதம் 17ஆம் தேதி, போர் முனையில் காயம் அடைந்து, வீரமரணம் அடைந்தார் ஜான்சிராணி. பிரித்தானியர் குவாலி யரை மூன்று நாட்களின் பின்னர் கைப்பற்றினர்.

வெள்ளையர் எதிர்ப்புக்காக நேதாஜி பெண்கள் படை உருவாக்கியபோது அதற்கு **'ஜான்சிராணி படை'** என்று பெயரிட்டார்.

***இவரது பிறந்தநாள் நவம்பர் 16 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.***

**Ω**

# *My Friend*

***"Your place is unbeatable in my heart,***

***Since you are not just a part.***

***But you are my entire hear...***

***Many could pars which may earily sort,***

***But you are precious,***

***Which may not earily caught...***

***This may be saved in your draft,***

***By saying the fact,***

***That my words are not just an Art,***

***But defines my entire heart ."***

- **S. Sakthivel**
I<sup>st</sup> B.Sc. Physics

**மாதம் ஒரு படைப்பாளர்**

## 'கல்கி'
## ரா. கிருஷ்ண மூர்த்தி

**முனைவர் ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

கல்கி (செப்டம்பர் 9, 1899 - டிசம்பர் 5, 1954) புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார். இவர் இயற்பெயர் ரா. கிருஷ்ணமூர்த்தி. பல சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் முதலியன வற்றை எழுதியுள்ளார். எனினும், மிகச் சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங் களை எழுதிய தற்காகப் பரவலாக அறியப்படு கிறார். இவர் எழுதிய ***பொன்னியின் செல்வன்*** புதினம் மிகப் புகழ் பெற்றதாகும். தன் படைப்புகள் மூலம் இந்திய தேசிய விடுதலை போராட்டத்திற்கும் பங்க ளித்திருக் கிறார். ***தியாகபூமி*** புதினம் திரைப் படமாகவும் எடுக்கப் பட்டது.

கல்கி 1899ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புட்ட மங்கலம் என்னும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார்.

ஆரம்பப்பள்ளிப் படிப்பைத் தனது கிராமத்தில் முடித்த பின் திருச்சியில் உள்ள தேசிய உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921இல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கியபோது, அவரது கருத்து களால் ஈர்க்கப்பட்டு கல்கி தன் பள்ளிப் படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

1922இல் சுதந்திரப் போராட் டத்தில் பங்குபெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923இல் அவர் ***நவசக்தி*** என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரிய ராகப் பணியாற் றினார். அவருடைய முதல் புத்தகம் 1927இல் வெளியானது.

சமஸ்கிருதமும் தியாகராஜரின் தெலுங்கு கீர்த்தனைகளும் பிரபலமாக இருந்து வந்த அக்காலக் கட்டத்தில் தமிழிசைக்காகக் கல்கி, சதாசிவம், எம். எஸ். சுப்புலட்சுமியுடன் இணைந்து பாடுபட்டார். இவர் எழுதிய ***'காற்றினிலே வரும் கீதம்'*** எனத் தொடங்கும் திரையிசைப் பாடல் பிரபல மானது. தமிழ் இசை குறித்த கல்கியின் சிந்தனைகளைத் 'தரம் குறையுமா' எனும் புத்தக வடிவில் வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவரது ஆகச் சிறந்த நாவல்கள் வருமாறு:

- கள்வனின் காதலி (1937)
- தியாகபூமி (1938-1939)
- பார்த்திபன் கனவு (1941 - 1943)
- சிவகாமியின் சபதம் (1944)
- அலை ஓசை (1948)
- பொன்னியின் செல்வன் (1950-1955)
- பொய்மான் கரடு (1951)
- அமர தாரா (1954)

Ω

## கல்வியின் மேன்மை

*"உன்னதமாய் உயர்வாய்*
*ஏற்றமிகு ஏணியாய்ப்*
*பண்பின் பரிணாமமாய்க்*
*கண்ணியத்தின் கடமையாய்ப்*
*பார்புகழும் பண்பாடாய்த்*
*திறமைகளின் தனித்துவமாய்ச்*
*செல்வங்களின் செழுமையாய்*
*இல்லாமை இல்லாததாய்*
*கல்லாமை இருள் அகற்றும்*
*கருத்துகளின் கருவூலமாய்*
*வாழ்வின் வளமையாய்*
*விளங்கும் கல்வியைக்*
*கற்போம் கசடற"*

**ப. கலையரசன்,**
முதலாண்டு நுண்ணுயிரியல்துறை

Ω

## VALUE OF ZERO

## Or

## ZERO IS EVER HERO

Every School consists of some co-curicular activities to enrich student's knowledge as well as creativity.

Similarly our school conducts a great deal of activities every week.

The day, Maths department organized a program. They narrated us a story.

Once the Maths teacher called all the numbers to stand in an order.

All the numbers arriver, but the teacher could not find anywhere.

Zero was hiding under the table. The teacher asked Zero, why he was hidling there.

The zero said pathetically that, 'Every number has some values, but I don't have'.

The teacher smiled. He asked the number one to stand infront. He asked the value. The group shouted one.

The he asked Zero, to stand besides one. The group shouted ten.

Then teacher went on adding zeroes to one. The value increased.

Then the teacher explained the value of zero to the group.

Zero felt happy. They conduded the story with a moral that NOTHING IS WORTHLESS.

**S. Deepa,** I[st] B.A. English

Ω